**ம.அ.6.ந.க.எண்.இ1/0556/2009**
**ஆணையர் அவர்களின் 12.02.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :47/2009 பொருள் எண்.1

**பழுதடைந்த கட்டிடங்கள் இடிக்க அனுமதி**

மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86, அருணாச்சலம் தெருவில் **86**வது கோட்ட அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்த அலுவலக கட்டிடம் செயல்பட்டு வரும் பழுதடைந்த கட்டிடத்தை இடித்து விட்டு, புதிய வார்டு அலுவலகம் கட்ட தீர்மான எண்.410/2008, நாள்:27.08.2008 ன்படி மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. புதிய வார்டு அலுவலக கட்டிடம் கட்டுவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது, இக்கட்டிடத்தை ஒட்டி அமைந்துள்ள உடற்பயிற்சிக் கூடம், மாநகராட்சி துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவை இடநெருக்கடியாக அமைந்துள்ளதால், அவற்றையும் இடித்து விட்டு, போதிய இட வசதியுடன் இவை அனைத்தையும் ஒரே கட்டிடத்தில் செயல்படுத்த ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டலாம் என்று உத்தேசிக்கப்பட்டுள்ளது. இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களின் விவரங்கள் பின்வருமாறு :–

| வ. எண் | இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு |
|---|---|---|---|---|
| 1. | 2. | 3. | 4. | 5. |
| 1. | வார்டு–86, அருணாச்சலம் தெருவில் உள்ள மாநகராட்சி உடற்பயிற்சிக் கூடம் | கட்டிடத்துறை 2000-2001 | ரூ.4,76,113.39 | தரைதளம் 726 சதுரடி |
| 2. | வார்டு–86, அருணாச்சலம் தெருவில் உள்ள சத்துணவுக் கூடம் | கட்டிடத்துறை 2000-2001 | ரூ.4,46,933.12 | தரைதளம் 1398 சதுரடி |
| 3. | வார்டு–86, அருணாச்சலம் தெருவில் உள்ள மாநகராட்சி துணை மின் நிலையம் | கட்டிடத்துறை 1993-94 | ரூ.5,58,160.88 | தரைதளம்–1864 ச.அடி முதல்தளம்– 786 ச.அடி மொத்தம் = 2650 சதுரடி |

மேற்சொன்ன கட்டிடங்களை இடித்து விட்டு ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டி முடிக்கப்படும் வரை உடற்பயிற்சிக் கூடம், சத்துணவுக் கூடம் மற்றும் துணை மின் நிலையம் ஆகியவற்றை அடுத்தக் கட்டிடத்தில் உள்ள சமூதாயக் கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள அறைகளில் செயல்படுத்தப்படும் என சமர்ப்பிக்கப்படுகிறது.

மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86 ல் அருணாச்சலம் தெருவில் இடிக்கப்பட உள்ள 86 வது கோட்ட அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள உடற்பயிற்சிக் கூடம், துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவற்றையும் இடித்து அகற்ற **6**வது வார்டு குழு தனது 29.01.2009 தேதியிட்ட தீர்மான எண்.13 ன்படி பரிந்துரை வழங்கியுள்ளது.

எனவே, மண்டலம்–6, பகுதி–17, வார்டு–86 ல் அருணாச்சலம் தெருவில் இடிக்கப்பட உள்ள 86 வது கோட்ட அலுவலகத்தை ஒட்டி அமைந்துள்ள உடற்பயிற்சிக் கூடம், துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூடம் ஆகியவற்றையும் இடித்து அகற்றி விட்டு, அவ்விடத்தில் கட்டிடத்துறை மூலம் கோட்ட இளநிலை பொறியாளர் அலுவலகம், சுகாதார ஆய்வாளர், துப்புரவு ஆய்வாளர், வரி வசூலிப்பவர், மன்ற உறுப்பினர் மற்றும் குடிநீர் வாரிய பொறியாளர் ஆகியோருக்கு அலுவலக கட்டிடங்கள் மற்றும் போதிய இடவசதியுடன்

உடற்பயிற்சிக் கூடம், சத்துணவுக் கூடம் மற்றும் துணை மின் நிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த கட்டிடம் கட்டும் பொருட்டு, உடற்பயிற்சிக் கூடம், துணை மின் நிலையம் மற்றும் சத்துணவுக் கூட கட்டிடங்களை இடித்து அகற்ற மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.26/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"மன்ற உறுப்பினர் தெரிவித்த கருத்திற்கினங்க வார்டு குழு தீர்மானம் மற்றும் நிலைக்குழு (கல்வி) தீர்மானம் பெற்று மீண்டும் மன்றத்திற்கு சமர்ப்பிக்கலாம் என்பதன் அடிப்படையில் இப்பொருள் தள்ளிவைக்கப்படுகிறது".

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.6.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :48/2009 பொருள் எண்.2

**பொதுக் கழிப்பிட கட்டிடம் இடிக்க அனுமதி**

| | | |
|---|---|---|
| வார்டு எண்.134 | : | மண்டலம் எண்.9 |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | ரெட்டி குப்பம் சாலையில் உள்ள பொதுக்கழிப்பிடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | : | கட்டிடத்துறை , 1964 |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | : | ரூ.4,203/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | : | பொதுமக்களால் பயன்படுத்த முடியாமல் பழுதடைந்த நிலையில் உள்ளதால் |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | : | 20 ச.மீ. |
| இடித்தபின் கட்டப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | இடித்து சமப்படுத்தப்படும் |
| 9வது மண்டல வார்டு குழுவின் தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | : | தீர்மான எண்:106, நாள்:30.06.2008 |

மேற்கண்ட கட்டிடத்தை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.05, நாள்: 10.02.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.19/2009, நாள்: 12.2.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.9.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.9.ந.க.எண்.பி6/362/09
ஆணையர் அவர்களின் 27.01.2009 நாளிட்ட குறிப்பு

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :49/2009 பொருள் எண்.3

**குப்பை வீடு இடிக்க அனுமதி**

| | | |
|---|---|---|
| வார்டு எண்.137 | : | மண்டலம் எண்.9 |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | சி.ஐ.டி. நகர் 3வது பிரதான சாலையில் உள்ள குப்பை வீடு |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | : | மண்டலம்–9, 2003–04 |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | : | ரூ.47,874.65 |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | : | சுகாதார கேடு விளைவிப்பதாலும், இடியும் நிலையில் உள்ளதாலும் |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | : | 9.30 ச.மீ. |
| இடித்தபின் கட்டப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | : | இடித்து சமப்படுத்தப்படும் |
| 9வது மண்டல வார்டு குழுவின் தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | : | தீர்மான எண்:199, நாள்:19.12.2008 |

மேற்கண்ட குப்பை வீட்டினை இடிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"10.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.06, நாள்: 10.02.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.20/2009, நாள்: 12.2.2009–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.9.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ.10.ந.க.எண்.சி3/092/2009
ஆணையர் அவர்களின் 20.01.2009 நாளிட்ட குறிப்பு

## 23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :50/2009 பொருள் எண்.4

### பழுதடைந்த பள்ளி கட்டிடம் இடிக்க அனுமதி

வார்டு.145 மண்டலம்–10

| | |
|---|---|
| இடிக்கப்படவேண்டிய கட்டிடத்தின் விவரம் | காரணீஸ்வரர் பகோடா தெருவில் உள்ள மாநகராட்சி பள்ளியின் கிழக்கு பக்கம் மிகவும் பழுதடைந்த சுமார் 77 சதுர மீட்டர் தரைதளம் மட்டும் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சுமார் நூறாண்டு காலம் தொன்மையான கட்டிடம் |
| கட்டிடத்தின் பரப்பளவு (சதுர அடியில்) | 828.52 ச. அடி |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 14,436/– |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | தற்போது பயன்பாட்டில் இல்லாத, சுமார் நூறாண்டு காலம் தொன்மையான கட்டிடம் |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் | 10–வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 797 , நாள்.24.11.2008 |

எனவே, மேற்கண்ட மாநகராட்சி பள்ளியின் கிழக்கு பக்கம் உள்ள பழுதடைந்த கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் (பணிகள் ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

09.02.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண். 05 /09 நாள் 09.02.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.2.2009 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.18/2009, நாள்: 12.2.2009-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.10.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி2/22046/2008**
**ஆணையாளர் அவர்களின் 17.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :51/2009 பொருள் எண். 5

**ஒய்வூதியம்**

திரு.டி.சிவக்குமார், செயற்பொறியாளர், மண்டலம்–6, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக பணியிலிருந்து 30.04.2001 பி.ப. முதல் ஓய்வு பெற்றார். தனியர் 34 வருடங்கள் 05 மாதங்கள் 01 நாள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப் பணி புரிந்தமையால், சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.பி2/18497/01, நாள்.31.07.2001ன்படி 01.05.2001 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.4963/– மற்றும் பணிக்கொடைத் தொகை ரூ.2,30,901/–ல் 25% பிடித்தம் ரூ.57725/– போக மீதம் ரூ.1,73,176/–யும் மற்றும் தொகுப்புத் தொகை ரூ.2,49,158/– வழங்கப்பட்டுள்ளது. துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை, நி.மு.எண்.1552/எ4/2008, நாள்.09.06.2008 சான்றின்படி தனியருக்கு அனுமதிக்கப்பட்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் விவரம் பின்வருமாறு.

| | ஓய்வூதிய பயன் |
|---|---|
| ஓய்வூதியம் 01.05.2001 முதல் மாதம் | ரூ.5325/– |
| பணிக்கொடை | ரூ.2,51,295/– |
| மாதத் தொகுப்புத் தொகை | ரூ.2130/– |
| குறைக்கப்பட்ட மாத ஓய்வூதியம் | ரூ.3195/– |
| தொகுப்பு மதிப்பீட்டுத் தொகை | ரூ.2,67,358/– |
| குடும்ப ஓய்வூதியம்<br>(மனைவி திருமதி.சி.மீனாட்சி) | ரூ.5325/– 01.04.2008 முடிய<br>ரூ.3195/– 02.04.2008 முதல் |

இவர் சென்னை மாநகராட்சி 2ம் வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.டி.சிவக்குமார் 30.04.2001 பி.ப. முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்ற செயற்பொறியாளர், மண்டலம்–6, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி ஓய்வூதிய பயன்களாக ஏற்கனவே வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.4963/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் ரூ.5325/–ஆக வழங்கவும், இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,51,295/–( ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஓராயிரத்து இருநூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பணிக்கொடை ரூ.2,30,901/–யை நேர்செய்து மீதம் ரூ.20,394/–ல் தணிக்கைத்தடை காரணமாக 25 விழுக்காடு ரூ.5,099/– (ஏற்கனவே வழங்கப்பட்ட பணிக்கொடையில் தணிக்கைத்தடை காரணமாக ரூ.57,725/– பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.) பிடித்தம் செய்து மீதத் தொகை ரூ.15,295/– (ரூபாய் பதினைந்தாயிரத்து இருநூற்று தொன்னூற்று ஐந்து மட்டும்) வழங்கவும் மற்றும் அனுமதிக்கப்படும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2130/–ஐ தொகுத்துப்பெறவும், அவ்வாறு தொகுத்துப்பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,67,358/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து முன்னூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்) ஏற்கனவே வழங்கப்பட்ட தொகுப்புத்தொகை ரூ.2,49,158/–யை சரிசெய்து மீதத் தொகை ரூ.18,200/– (ரூபாய் பதினெட்டாயிரத்து இருநூறு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5325/–லிருந்து ரூ.3195/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குப்பின் அன்னாரது மனைவி திருமதி.சி.மீனாட்சி, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக ரூ.5325/– 01.04.2008 வரையிலும் அதன் பின்னர் 02.04.2008 முதல் ரூ.3195/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**சு.து.(ம).ந.க.எண்.எம்1/0120/07**
**ஆணையாளர் அவர்களின் 13.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :52/2009 பொருள் எண். 6

**பணிவரன்முறைப்படுத்துதல்**

மன்ற தீர்மான எண்.393/2008, நாள்.30.07.2008ல் சுகாதாரத்துறை மலேரியா பிரிவில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலர் பதவிக்கான தெரிவு பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து இவ்வலுவலக 21.08.2008 தேதியிட்ட செயல்முறை ஆணையின்படி திரு.எஸ்.மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலருக்கு தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இவர் 25.08.2008 அன்று தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பணியில் சேர்ந்தார்.

அரசு ஆணை (ப) எண்.522 ந.நி.ம.கு.வ.(மா.ந) துறை, நாள்.12.12.2008ன்படி சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை (மலேரியா) பிரிவில் முதுநிலை பூச்சியியலர் திரு.எஸ்.மோகன்தாஸ், அவர்களுக்கு ரூ.10,000–325–15200 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் தலைமை பூச்சி தடுப்பு அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கான அரசு உறுதியாக்கம் வழங்கி ஆணை வெளியிட்டுள்ளது.

அரசாணையினை தொடர்ந்து திரு.எஸ்.மோகன்தாஸ், முதுநிலை பூச்சியியலருக்கு அவர் பணியில் சேர்ந்த நாளான 25.08.2008 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:சு.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

வ.து.ந.க.எண்.அ1/600/2009
ஆணையாளர் அவர்களின் 29.01.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :53/2009 பொருள் எண்.7

பணிவரன்முறைப்படுத்த அனுமதி

சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, 8வது மண்டலத்தில் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து 31.05.2008 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்ற திரு.ஜி.புருஷோத்தம், என்பவருக்கு உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு 16.06.2006 நாளிட்ட ஆணையின்படி வழங்கப்பட்டது. தனியர் வரிமதிப்பீட்டாளராக பணிபுரிந்தபோது அவர் மீது விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்கத்தினரால் தெரிவிக்கப்பட்ட புகாரின் மீது இறுதி முடிவில் குற்றமற்றவர் எனத் தெரியவரின் அவரது உதவி வருவாய் அலுவலர் பதவியில் முன் தேதியிட்டு, அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு, நிபந்தனையுடன் பதவி உயர்வு வழங்கப்பட்டது.

அரசாணை எண்.203, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஈ4) துறை, நாள்.15.05.2008 இவர் மீதான நடவடிக்கையினை கைவிட்டு அரசு ஆணை பிறப்பித்தது. இதனைத் தொடர்ந்து தனியருக்கு உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு வழங்கப்பட்டதை உறுதி செய்ய அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது.

அரசாணை (ப) எண்.500, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந–3) துறை, நாள்.01.12.2008ல் தனியருக்கு உதவி வருவாய் அலுவலர் பதவி அளித்ததை அரசு உறுதியாக்கம் செய்து ஆணையிட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து திரு.ஜி.புருஷோத்தம், என்பவருக்கு உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாளான 21.06.2006 முதல் பணிவரன்முறைப்படுத்திட மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:வ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ2.ந.க.எண்.இ3/8191/98

ஆணையாளர் அவர்களின் 02.01.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :54/2009 பொருள் எண்.8

பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

சென்னை மாநகராட்சி, மண்டலம்–2ல் துப்புரவு மேஸ்திரியாக பணிபுரிந்த திரு.கே.பிரிதிவிராஜ்சிங், அவர்கள் 04.01.1997 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை எனவே, 21.05.1998 மற்றும் 10.08.1998 நாளிட்ட குறிப்பாணை வழங்கியதில், தனியர் தனது கடிதநாள் 16.10.1998ல் தனது தங்கை இறந்ததாலும் மற்றும் குடும்ப பிரச்சனையாலும் பணிக்கு வரஇயலவில்லை என தெரிவித்தார். அன்னார் தந்த விளக்கம் திருப்தி அளிக்காததினால் அன்னார் மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு தனியரின் விளக்கம் ஏற்றுக்கொள்ள இயலாததால் விதி 9(1)ன் கீழ் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை விலக்கிகொள்ளப்பட்டு விதி 9(2)ல் கீழ் கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு குற்றக்குறிப்பாணை வழங்கப்பட்டது. இந்த குறிப்பாணையை பெற்றுக்கொண்டு தனியர் அளித்த விளக்கங்களுடன் விதிகளின்படி விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு அறிக்கை பெறப்பட்டது.

குற்றச்சாட்டு–1 தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் நின்று விட்டதற்கு எந்தவித கடிதமும் அனுப்பாமல் இருந்தது.

தனியரின் விளக்கம் தனது குடும்பத்தில் தொடர் நிகழ்ச்சிகளாக தனது தங்கை இறந்து விட்டதும், மேலும் தனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததாலும் தான் குடல்புண் நோயினால் அவதிப்பட்டதால் ஏற்பட்ட மனஉளைச்சலினாலும் முன்கூட்டி தகவல் தர இயலாமல் போய்விட்டது.

விசாரணை அலுவலரின் குறிப்பு குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

குற்றச்சாட்டு–2 தாங்கள் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமைக்கு போதிய காரணங்களை முன்னரே தெரிவிக்காதது.

தனியரின் விளக்கம் தன் குடும்பத்தில் ஏற்பட்ட இன்னல்களினால் தங்களுக்கு முன்கூட்டியே தகவல் அளிக்க இயலாமல் போய்விட்டது.

விசாரணை அலுவலரின் குறிப்பு குற்றச்சாட்டு நிரூபணமாகவில்லை.

குற்றச்சாட்டு–3 தங்களது பணி பொது மக்கள் தொடர்புடைய காரணத்தினால் பணிக்கு வராமல் நின்று விட்டது பணியின் மீது தங்களுக்குள்ள அக்கறையின்மையை காட்டுகிறது.

தனியரின் விளக்கம் தன் கடந்த 30 ஆண்டுகளாக பொது நலனில் அக்கறையுடன் பணி செய்துள்ளதாகவும் தனது குடும்பத்தில் தொடர்ச்சியாக ஏற்பட்ட இன்னல்களினால் பணிக்கு வர இயலாமல் போய்விட்டது. ஆகவே தன்னை மன்னித்து பணியில் மீண்டும் தொடர அனுமதிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

விசாரணை அலுவலரின் குறிப்பு குற்றச்சாட்டு நிரூபணமாகிறது.

மேற்கண்ட விசாரணை குறிப்பு தனியருக்கு சார்பு செய்ததில் தனியர் தனது மேல் விளக்கத்தில் தனது தங்கை இறந்து விட்டதாலும் குடும்பத்தில் தொடர் நிகழ்ச்சிகளாக தனது மனைவிக்கு உடல் நலம் குன்றியதாலும் தான் குடல் புண் நோயினால் அவதிப்பட்டதாலும் தனது 85 வயதாகும் தனது தாய்க்கு கண்பார்வை இல்லதாதினால் அவருக்கு சேவை செய்து வந்ததாலும் ஏற்பட்ட மன உளைச்சலினால் முன்கூட்டி தகவல் அளிக்க இயலவில்லை என்றும் மேலும் தனக்கு எந்தவித வருமானமும் இல்லாததினால் மருத்துவ கமிட்டியில் சிபாரிசுபடி தன் பணிநீக்கத்தை ரத்து செய்யவும் கேட்டுள்ளார். அன்னார் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து பணியில் சேர அனுமதித்து அன்னார் 18.05.1999 அன்று பணியில் சேர்ந்தார்.

இந்நிலையில் தனியர் மீது தொடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கை முடிவுறாத காரணத்தால் தனியரை 30.06.1999 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதி அளிக்காமல், 30.06.1999 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டார். மேலும் இந்த ஒழுங்கு நடவடிக்கை மீது இறுதி ஆணை பெறும் பொருட்டு ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்ட குறிப்பின்மீது ஆணையர், தனியர் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், அதற்கு தனியர் சமர்ப்பித்த விளக்கம் விசாரணை அலுவலரின் அறிக்கை அதற்கு தனியரின் கூடுதல் விளக்கம் ஆகியவை சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் கவனமாக பரிசீலனை செய்து குற்றச்சாட்டு–1 மற்றும் 3க்கு விசாரணை அலுவலரின் அறிக்கையின் பேரில் ஆணையருக்கு இறுதி ஆணை வழங்க வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. ஆணையர் அவர்களின் 22.01.2001 நாளிட்ட ஆணையில் மேற்படி தனியருக்கு 2 வருடத்திற்கு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்யுமாறு ஆணையிடப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தற்காலிக பணிநீக்க காலமான நாளான 30.06.1999ஐ தகுதியுள்ள விடுப்பாக வரன்முறைப்படுத்தி 30.06.1999 அன்றே ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார்.

மேலும், வழுங்கப்படும் தண்டனை செயல்படுத்த கூடியதான தண்டனையாக வழங்கப்படலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது. உதாரணமாக இந்நேர்வில் தனியர் ஓய்வு பெற்றுவிட்டதால், ஏற்கனவே ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டுள்ள ஊதிய நிறுத்த தண்டனையை செயல்படுத்த இயலாது என்பதால் இத்தண்டனையால் ஏற்படும் கருத்தியலான நிதி இழப்பிட்டை இவரிடம் இருந்து பிடித்தம் செய்ய உத்தரவிடலாம் எனவும், இது குறித்து “ தண்டனை குறித்த மறு ஆணை வேண்டப்படுகிறது” என ஆணையருக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. அதற்கு ஆணையர் அவர்கள் 24.05.2003ல் 3மாதத்திற்கு இணையான ஊதிய உயர்வை நிறுத்தம் செய்யலாம் என ஆணையிட்டுள்ளார்.

எனவே, இந்நிகழ்வில் தனியர் பணிக்கு வராத காலமான 04.01.1997 முதல் 17.05.1999 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அக்காலத்தை வரன்முறைப்படுத்திட அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்திட கேட்டுக்கொண்டு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறைப்படுத்தப்படும் என தெரிவித்தும் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

மேற்படி விதிகளின்படி தனியர் 04.01.1997 முதல் 17.05.1999 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு அனுப்பி வரன்முறை படுத்திடப்படவேண்டும்.

எனவே, திரு.கே.பிரிதிவிராஜ்சிங், துப்புரவு மேஸ்திரி, மண்டலம்–2, என்பவர் பணிக்கு வராத காலமான 04.01.1997 முதல் 17.05.1999 வரையிலான காலம் ஓராண்டை கடந்துள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்து அரசாணை பெறுவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/3383/2008
ஆணையாளர் அவர்களின் 29.01.2009 நாளிட்ட குறிப்பு

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :55/2009 பொருள் எண். 9

**தமிழ் மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திருமதி.ஜெஹிராகாத்தூன், அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 06.04.1984 அன்று அரங்க உதவியாளராக பணியமர்வு பெற்று இதுநாள் வரை தொடர்ந்து பணி செய்து வருகிறார். தனியரின் தாய்மொழி உருது ஆகும். இவர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற அறிவுறுத்தி அலுவலக குறிப்பாணைகள் வழங்கப்பட்டது. மேலும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் 2003ம் ஆண்டு முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறும் பொருட்டு தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் 5 முறை கலந்து கொண்டும் தேர்ச்சி பெறவில்லை.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் தொடர்ந்து 24 ஆண்டுகளுக்கு மேல் எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் பணி செய்து வருகிறார். தனியரின் வயது 54 ஆகும். இவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் தொடர்ந்து பெறவும், பணி ஓய்வு காலத்திற்கு உரிய பணப்பயன்கள் முழுமையாக பெறவும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததற்காக அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திருமதி. ஜெஹிராகாத்தூன், அரங்க உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களுக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசின் தளர்வாணைபெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்5/3392/2008

ஆணையாளர் அவர்களின் 29.01.2009 நாளிட்ட குறிப்பு

23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :56/2009 பொருள் எண்.10

## தமிழ் மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்

திருமதி.கே.ஜி.சுகுணாதேவி, அவர்கள் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் 15.07.1979 அன்று மகப்பேறு உதவியாளராக பணியமர்வு பெற்று இதுநாள் வரை தொடர்ந்து பணி செய்து வருகிறார். தனியரின் தாய்மொழி தெலுங்கு ஆகும். இவர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெற அறிவுறுத்தி அலுவலக குறிப்பாணைகள் வழங்கப்பட்டது. மேலும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் 2002ம் ஆண்டு முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

தனியர் தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறும் பொருட்டு தமிழ்நாடு அரசு தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்ச்சில் 5 முறை கலந்து கொண்டும் தேர்ச்சி பெறவில்லை. அதற்கான சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் தொடர்ந்து 29 ஆண்டுகளுக்கு மேல் எந்தவித குற்றச்சாட்டுகளும் இல்லாமல் பணி செய்து வருகிறார். தனியரின் வயது 55 ஆகும். இவர் வருடாந்திர ஊதிய உயர்வுகள் தொடர்ந்து பெறவும், பணி ஓய்வு காலத்திற்கு உரிய பணப்பயன்கள் முழுமையாக பெறவும் தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறாததற்காக அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்.

எனவே, திருமதி.கே.ஜி.சுகுணாதேவி, மகப்பேறு உதவியாளர், மாவட்ட குடும்ப நலத்துறை அவர்களுக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசின் ஆணைப்பெற நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.

நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ10/1270/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :57/2009 பொருள் எண்.11

**தமிழ் மொழி தேர்வு தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

26.02.2008 நாளிட்ட கடிதத்தில் திரு. எஸ்.கமலாக்கர், ஷெராப், மத்திய கணக்கு குழுமம், (பணியிடம் கருவூலம்) அவர்கள் 30.06.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றவர். தான் தமிழ்மொழி தேர்வில் எட்டு முறை தேர்வு எழுதியும் தன்னால் தேர்ச்சி பெற முடியவில்லை என்றும், தனக்கு தமிழ்மொழி தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கவும், நிறுத்தப்பட்ட வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கவும், ஷெராப் பதவியில் பணிவரன்முறைப்படுத்தவும் கோரியுள்ளார்.

14.10.2008 நாளிட்ட கடிதத்தில் சார் செயலாளர், அவர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய குழுமத்தால் நடத்தப்படும் தமிழ்மொழி தேர்வில் தனியர் எட்டுமுறை தேர்வு எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில் தனியர் 30.06.2008 அன்று பிற்பகல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றார். அன்னாரின் தாய் மொழி தெலுங்கு ஆகும். இவர் தமிழ் மொழி தேர்வில் தேர்ச்சி பெறாத நிலையில் 01.10.2004 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்படவில்லை. தனியருக்கு தற்போது தற்காலிக ஓய்வூதியம் தற்காலிக பணிக்கொடை மட்டும் வழங்கப்பட்டு வருகிறது.

மேலும், தனியர் 02.11.1968 அன்று கொல்லாவாக சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்தார். இப்பதவியில் 02.11.1968 அன்று பணிவரன் முறையும் 02.11.1970 அன்று தகுதிகாண் பருவமும் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். பின்னர், 24.10.1973 அன்று ஷெராப்பாக பதவி உயர்வு பெற்றார். இப்பதவியில் பணிவரன்முறைப்படுத்தவும் 01.10.2004 முதல் வருடாந்திர ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு. எஸ்.கமலாக்கர், (ஓய்வு) அவர்களுக்கு தமிழ்மொழித் தேர்வில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்க அரசின் உத்தரவு வேண்டி செயற்குறிப்பு அனுப்பவும், மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ8.ந.க.எண்.அ3/13812/95**

**ஆணையாளர் அவர்களின் 13.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :58/2009 பொருள் எண்.12

**ஒழுங்கு நடவடிக்கை மீது இறுதி ஆணை வேண்டி**

திரு.ஏ.பசல்கான், துப்புரவு ஆய்வாளர், அவர்கள் 20.11.1995 முதல் 29.01.1997 வரை முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக அன்னார் மீது சென்னை மாநகராட்சி மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 துணை விதி 9(2)ன் கீழ் 29.01.1997 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது.

1. இவர் 15.11.1995 அன்று பணிக்கு ஆஜராகி எந்த மேலதிகாரிகளிடமும் முன் அனுமதி பெறாமல் அன்று காலை திடீரென பணியிலிருந்து வெளியேறிவிட்டார்.
2. இவர் 20.11.1995 முதல் இந்நாள் வரையிலும் தக்க கடிதம் அளிக்காமல் பணியிலிருந்து நின்று விட்டார்.
3. இவர் 116வது கோட்டத்தைச் சேர்ந்த ஆவணங்கள் மற்றும் பொறுப்புகளை சரியாக யாரிடமும் ஒப்படைக்கவில்லை.
4. இவர் தனது 27.03.1996 நாளிட்ட கடிதத்தில் முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாக மண்டல அலுவலர்–8, அவர்களை நேரில் சந்தித்து மாற்றுப் பணியிடம் வழங்க கோரியுள்ளதாக கூறியுள்ளது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதுவரை அவர் மண்டல அலுவலரை நேரில் சந்திக்கவில்லை.
5. இவர் பணியில் பொறுப்பற்றவராகவும், பணியின் முக்கியத்துவத்தை அறியாதவராகவும் இருக்கிறார்.

மேலேகண்ட குற்றச்சாட்டுகளுக்கு 17.02.1997 நாளிட்ட விளக்கக் கடிதத்தில் தனியர் கீழ்கண்டவாறு கூறியுள்ளார்.

<u>குற்றச்சாட்டு–1</u> 15.11.1995 அன்று மேலதிகாரிகளிடம் முன்னனுமதி பெறாமல் திடீரென்று பணியிலிருந்து வெளியேறிவிட்டதை மறுப்பதாக தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–2</u> 20.11.1995ல் இருந்து தக்க கடிதம் அளிக்காமல் பணியிலிருந்து நின்றுவிட்டேன் என்பதை மறுப்பதாகவும் 17.11.1995 அன்று நேரிலும் 20.11.1995 அன்று மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பிய பணியிட மாற்றம் வழங்கக் கோரிய கடிதத்திலும் முறையிட்டிருப்பதாக தெரிவித்துள்ளார்.

<u>குற்றச்சாட்டு–3</u> 116வது கோட்டத்தைச் சேர்ந்த ஆவணங்கள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைக்கவில்லை என்பதை மறுப்பதாகவும்,115வது கோட்ட துப்புரவு ஆய்வாளரிடம் பொறுப்புகளை ஒப்படைத்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

<u>குற்றச்சாட்டு–4</u> தான் 27.03.1996 நாளிட்ட கடிதத்தில் தான் மண்டல அலுவலரை சந்தித்தாக குறிப்பிட்டிருப்பதை உண்மையே என்று குறிப்பிட்டுள்ளார்.

<u>குற்றச்சாட்டு–5</u> பணியில் பொறுப்பற்றவராகவும், பணியின் முக்கியத்துவத்தை அறியாதவராக இருக்கிறேன். என்ற குற்றச்சாட்டை மறுப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனிடையில் தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி 30.01.1997 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டுள்ளார்.

<u>ம.அ8.ந.க.எண்.அ3/13812/95</u>

ஒழுங்கு நடவடிக்கையை இறுதியாக்கும் பொருட்டு விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை அறிக்கையில் தனியர் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகவில்லை என்று விசாரணை அலுவலர் தெரிவித்துள்ளார். தனியரின் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை என விசாரணை அலுவலர் தெரிவித்துள்ள போதிலும் தனியரின் கடந்த கால தண்டனைகளை கருத்தில் கொண்டு இவர் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபணமானதாகவே கருதப்பட்டு தனியருக்கு தண்டனை வழங்க முடிவு எடுக்கப்பட்டு அடுத்த கீழ்நிலை பதவியான துப்புரவு மேஸ்திரியாக ஓராண்டிற்கு பதவியிறக்கம் செய்தால் அதற்குண்டான பணப்பயன்களை அவரிடமிருந்து வசூல் செய்வது என்ற தண்டனை வழங்க ஆணையரால் உத்தேச முடிவு எடுக்கப்பட்டு இத்தண்டனையை ஏன் நிறைவேற்றக்கூடாது. என்பதற்கான காரணம் கேட்கும் குறிப்பாணை 16.05.2000 அன்று தனியருக்கு வழங்கப்பட்டு விளக்கம் கோரப்பட்டது. தனியர் மேற்கண்ட காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு 22.05.2000 நாளிட்ட தனியரின் விளக்கத்தில் தனக்கு வழங்கப்பட்ட காரணம் கேட்கும் குறிப்பாணையை திரும்ப பெறவும், மேலும் ஒழுங்கு நடவடிக்கையை கைவிடவும் தாழ்மையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதனிடையில் 31.12.1999 அன்று ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவிற்கு குந்தகமின்றி வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பணியாளர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவர்கள் ஓய்வு பெற்று விட்டால் அவ்வொழுங்கு நடவடிக்கையில் இறுதி முடிவெடுக்க தமிழ்நாடு ஓய்வூதிய விதிகள் 9(2) (பி)(1)ன்படி அரசுக்கு தான் அதிகாரம் உள்ளது என்பதால் மன்றத் தீர்மானம் எண்.456/2005, நாள். 21.11.2005ன்படி மன்றத்தின் அனுமதி பெற்று இறுதி ஆணைக்காக அரசுக்கு அனுப்பப்பட்டது. அரசுக் கடிதம் எண்.7320/மா.ந3/2006, நாள்.07.12.2006 கோப்பில் சில குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டதன் அடிப்படையில் அக்குறைகளுக்கு விளக்கங்களுடன் மீண்டும் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில் அரசுக் கடித எண்.23176/மா.ந3/2007, ந.நி.(ம) கு.வ.துறை, நாள்.01.11.2007ல் மேற்கண்ட பொருள் தொடர்பாக உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் கருத்துரை பெற்று செயற்குறிப்பினை மன்ற அனுமதியுடன் புதுப்பித்து அனுப்புமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் கருத்துரை கோரி முழு கோப்பும் அனுப்பி கருத்துரை பெறப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை கடித எண்.ஒ.மு.எண்.4522/எ4/2007, நாள்.10.01.2008ல் வழங்கப்பட்ட கருத்துரையும் அதற்கான விளக்கமும் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

1. திரு.ஏ.பசல்கான்,08.12.1998 முதல் 14.12.1999 வரை தற்காலிக பணிநீக்கத்தில் இருந்துள்ளார். ஆனால் மேற்படி தற்காலிக பணிக்காலம் எவ்வாறு முறைப்படுத்தப்பட்டது என்ற விவரமில்லை.

ஆணையர் அவர்களின் 27.05.2004 நாளிட்ட செயல்முறை ஆணை எண்.தி.க.மே.து.ந.க. எண்.அ5/4826/98ன்படி தனியரை எச்சரித்தும் மேலும் தற்காலிக பணிநீக்க காலத்தை தகுதியுள்ள விடுப்பாக பாவிக்கவும் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதற்கான பதிவு பணிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

2. தற்காலிக பணிநீக்க காலம் ஓராண்டிற்கு மேல் மருத்துவ சான்றில்லாமல் முறைப்படுத்தப்பட்டால் ஊதியமில்லா விடுப்பு என அடிப்படை விதி எண்.18(1)ன் கீழ் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும்

முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதவர்களுக்கு மட்டும் தான் அடிப்படை விதி எண்.18(1)ன் கீழ் அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும். இந்நிகழ்வில் தனியர் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். எனவே, அடிப்படை விதி 18(1) இந்நிகழ்விற்கு பொருந்தாது.

3. அவர்மீதான ஒழுங்கு நடவடிக்கையில் குறைபாடுகள் உள்ளன.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் 06.11.2008 நாளிட்ட கடிதத்தில் ஏற்கனவே 10.01.2008 நாளிட்ட கருத்துருவில் வரிசை எண்.4 மற்றும் 5ல் தெரிவிக்கப்பட்ட இனங்களாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. ஒருவரை பணி இறக்கம் செய்து தண்டனை வழங்கும் போது தமிழ்நாடு அடிப்படை விதிகள் விதி எண்.28, 29 மற்றும் Rulings there under வழிமுறைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

இந்நிகழ்வில் தனியருக்கு பணியிறக்கம் செய்து தண்டனை வழங்க ஆணையரால் தற்காலிக முடிவு தான் எடுக்கப்பட்டுள்ளது. தண்டனை உறுதி செய்யும் பட்சத்தில் இவ்வழிமுறைகள் பின்பற்றப்படும்.

5. வழங்கப்பட்ட தண்டனை பின்னாளில் அவரது பணிக்காலம் மற்றும் ஓய்வூதியப் பயன்களில் எந்த அளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதும் குறிப்பிடப்பட வேண்டும்.

இந்நிகழ்வில் தனியருக்கு பணியிறக்கம் செய்து தண்டனை வழங்க ஆணையரால் தற்காலிக முடிவு தான் எடுக்கப்பட்டுள்ளது. தற்காலிக முடிவை உறுதி செய்யும் பட்சத்தில் இவ்விதிகளின் படி வழிமுறைகள் பின்பற்றப்படும்

6. இவ்வாறு தண்டனை வழங்கிடப்படாமல் அரசு ஆணைஎண்.113, நாள்.02.08.06ல் தெரிவித்த வழிமுறையின்படி தண்டனைக்குரிய ஊதிய வேறுபாட்டுத் தொகையை அவரிடமிருந்து பிடித்தம் செய்து தண்டனையை ஒழுங்கு படுத்தலாம்.

இந்நிகழ்வில் அரசுதான் ஓய்வூதிய விதி 9(2) (பி)(1)ன் கீழ் அரசு தான் இறுதி ஆணை பிறப்பிக்கப்படவேண்டும்.

மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில் இவ்வொழுங்கு நடவடிக்கையில் இறுதியாணை பெறவும், இறுதி ஆணைக்கு தக்கவாறு தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலம் 20.11.1995 முதல் 29.01.1997 வரையிலான காலத்தை வரன்முறைப்படுத்தவும் அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.                    மன்றச் செயலாளர்

**மி.து.ந.க.எண்.அ5/4566/08**

**ஆணையாளர் அவர்களின் 28.01.2009 நாளிட்ட குறிப்பு**

**23.02.2009 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :59/2009 பொருள் எண்.13

**துணை விதி திருத்தம்**

சென்னை மாநகராட்சி மின்துறையில் ரேடியோ எலக்டிரிசியன் (Radio Electrician) பதவி ஒன்று காலியாக உள்ளது. இப்பதவியினை நிரப்ப நேரடியாகவோ, கீழ்நிலை பதவியிலிருந்து பதவி உயர்வு மூலமாகவோ வழங்கலாம்.

நிரந்தர மின்பணியாளரின் பதவிக்குரிய ஊதிய விகிதத்தைவிட ரேடியோ எலக்டிரிசியன் (Radio Electrician)க்குரிய ஊதிய விகிதம் கூடுதலாக உள்ளதாலும், இது பதவி உயர்வு என்பதாலும், இது குறித்து அனைத்து மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கும் சுற்றுக்கு விட்டு தகுதி வாய்ந்த மற்றும் ரேடியோ எலக்டிரிசியன் அனுபவம் பெற்றுள்ள விருப்பமுள்ள நபர்களின் பட்டியல் பெறப்பட வேண்டும்.

நிரந்தர மின்பணியாளருக்கான ஊதிய விகிதம் ரூ.2550–55–2660–60–3200 ஆகும். ரேடியோ எலக்டிரிசியன் பதவிக்கான ஊதிய விகிதம் ரூ.2750–70–3800–75–4400 ஆகும். அது மட்டுமின்றி, ரேடியோ எலக்டிரிசியன் பதவிக்கு நியமனம் செய்ய சென்னை மாநகராட்சி துணை விதிகளின்படி கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| Category | Recruitment | Qualification |
|---|---|---|
| Category-29<br>Radio Electrician | 1. By direct recruitment<br>(or)<br>2. By promotion from Categories Asst. Electrician (Wiremen Grade-II Asst. Jointer. | S.S.L.C. or X std failed with ITI Certificate in Radio Mechanic or Engineering.<br>(or)<br>10 years experience in the field of Radio Mechanic or Engineering for considering promotion from lower category. |

ரேடியோ எலக்டிரிசியன் பதவிக்கு நேரடி நியமனம் மூலமாகவோ அல்லது கீழ்நிலை பதவியில் இருந்து பதவி உயர்வு மூலமாகவோ நியமனம் செய்யப்பட வேண்டும் எனவும், அதற்கான கல்வித் தகுதி எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 10–ஆம் வகுப்பு தேர்ச்சி அடையாதவராகவும் மற்றும் ரேடியோ எலக்டிரிசியனில் 10 வருடம் அனுபவம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது ரேடியோ எல்க்டிரிசியன் பதவிக்கு ஒரு காலிப்பணியிடம் உள்ள காரணத்தினால், அந்த காலிப்பணியிடத்தினை நிரப்ப மேற்கண்ட சென்னை மாநகராட்சி துணை விதிகளின்படி தகுதியுள்ளவர்களை பணி மூப்பின் அடிப்படையில் 31.12.2007 மைய நாளாக கொண்டு மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கும் சுற்றுக்கு விடப்பட்டது.

அதன் அடிப்படையில், இவ்வலுவலக 20.10.2008 நாளிட்ட சுற்றறிக்கையில், மேற்கண்ட பதவிக்கான பணிமூப்புநிலை பட்டியல் தயாரிக்க தகுதியுள்ளவர்களின் பட்டியல் தயாரித்து, தனியரின் விருப்ப கடிதத்துடன் 30.10.2008–க்குள் அனுப்புமாறு அனைத்து மண்டல அலுவலர்களையும், துறைத் தலைவர்களையும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், 30.10.2008–ம் நாள்வரை, திரு. ஏ. ராஜகோபால், நிரந்தர மின் பணியாளர், மின்துறை (தலைமையிடம்), அவர்களிடமிருந்து மட்டும் விருப்ப கடிதம் பெறப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் அன்னார் சென்னை மாநகராட்சி மின்துறையில் ஒலிபெருக்கி கருவிகளை இயக்கி பராமரித்தல் சம்மந்தமான பணிகளை கடந்த 10 வருடங்களாக செய்து வருவதாகவும், நிரந்தர மின்பணியாளராக பணியமர்வு செய்யப்பட்டு, பணிபுரிந்துவரும் தம்மை ரேடியோ எலக்டிரிசியன் பதவியில் பணியமர்வு செய்ய உதவிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிலையில் 31.12.2007-ஐ மையநாளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டியலில் நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதிபெறும் முன்பாக, முடிவுற்ற நிலையில் இப்பட்டியலை இன்மை பட்டியலாக அறிவித்து, 31.12.2008 என கருதவும் அனுமதி வேண்டப்படுகிறது.

இதுகுறித்து கீழ்கண்ட விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிடத்தில் மாமன்றத்தில் உள்ள ஒலிபெருக்கி கருவிகளை 1996 ஆம் ஆண்டு முதல் மெக்கோ டிரானிக்ஸ் நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது.

பின்னர், 1998 முதல் நிர்வாக நலன் கருதி அந்நிறுவனத்தில் பயிற்சி பெற்ற திரு. ஏ. ராஜகோபால் என்பவரை தற்காலிக மின் பணியாளராக மின்துறையில், பணி அமர்த்தப்பட்டு பணியாற்றி வந்துள்ளார்.

மேலும், சென்னை மாநகராட்சி மன்றக் கூடத்தில் ஒலி அமைப்பினை சிறந்தமுறையில் பராமரிக்க ஒரு புதிய பதவியை தோற்றுவிக்க, மின்துறை மூலமாக, தனியான முன்மொழிவினை, அடுத்துவரும் நியமனக்குழுவிற்கு சமர்ப்பிக்கும்படி நியமனக்குழு தீர்மான எண்.210/98, நாள்.16.7.98-ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் மன்றத் தீர்மானமும் பெறப்பட்டுள்ளது. ஆனால் இதுநாள்வரை மேற்படி தீர்மானத்தின்மீது எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரியவருகிறது.

இதுகுறித்து சமர்ப்பிப்பது யாதெனில், மேற்குறிப்பிட்டுள்ள நியமனக்குழு தீர்மானத்தின்படி, புதிய பதவியை ஏதும் தோற்றுவிக்காமல், மன்றக் கூடம் மற்றும் இதர ஒலிபெருக்கி கருவிகளை இயக்கி, பராமரிக்க, ஒரு நபரை சென்னை மாநகராட்சி துணை விதிகளில் கண்டுள்ளபடி ரேடியோ எலக்டிரிசியன் பதவியை கொண்டு தேர்வு செய்யலாம் என்ற கருத்துரு தீர்மானிக்கப்படுள்ளது.

மின்துறையில், ஒலிபெருக்கி சாதனங்களை இயக்கிவந்த திரு. எத்திராஜ், மின்கம்பியாளர் அவர்கள் 30.6.99ல் வயதுமுதிர்வு காரணமாக ஓய்வு பெற்றுவிட்டார். இவருக்கு பதிலாக எவரும் நிரப்பப்படவில்லை. திரு. ஏ. ராஜகோபால் என்பவர் மட்டுமே இந்த ஒலிபெருக்கி சாதனங்களை இயக்கும் பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.

மேலும், சென்னை மாநகராட்சி, மாமன்ற ஒலிபெருக்கி சாதனங்களை கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக பராமரித்து, இயக்கி வருவதால், இவருடைய பணி அனுபவத்தை கருத்திற்கொண்டு, இவருக்கு இப்பதவியை அளிக்கலாம் என கருதப்படுகிறது. மேலும், இவர் Radio, Tape Recorder, Monochrome TV, Servicing & Maintenance என்ற பயிற்சியில் சான்றிதழ் பெற்றுள்ளார்.

மேற்கூறப்பட்டுள்ள கருத்துருவின் அடிப்படையில், நிரந்தர மின்பணியாளராக தற்போது சென்னை மாநகராட்சி மின்துறையில் பணியாற்றிவரும், திரு. ஏ. ராஜகோபால், என்பவரின் மனுவை ஏற்று, அன்னாருக்கு ரேடியோ எலக்டிரிசியன் பதவி உயர்வு வழங்கலாம்.

மேலும், எவரிடமிருந்தும் மேற்குறிப்பிட்டுள்ள காலக்கெடுவுக்குள் விண்ணப்பங்கள் பெறப்படவில்லை என்றும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இது சம்மந்தமாக, மேலும் சமர்ப்பிப்பது யாதெனில், தனியர் தற்காலிக மின்பணியாளராக மின்துறையில் 1996 முதல் பணியாற்றி தற்போது 23.2.2006 முதல் நிரந்தர மின்பணியாளராக பணியாற்றி கீழ்கண்ட பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

1) சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிடத்தில் அமைந்துள்ள மாமன்ற கூடம், ஆலோசனை கூடம், சுதந்திர பொன்விழா கட்டிடத்தில் உள்ள ஆலோசனைக்கூடம், வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் ஆலோசனைக் கூடம் இவைகளில் அமைக்கப்பட்டுள்ள ஒலிபெருக்கி கருவிகளை நல்லமுறையில் இயக்கி, பராமரித்து வருகிறார்.

2) சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிடத்தில் நடைபெறும் பல்வேறு சிறிய நிகழ்ச்சிகளுக்கு ஒலிபெருக்கி அமைக்கும் பணியை செய்து வருகிறார்.

அன்னார் 23.2.2006 முதல் நிரந்தர மின்பணியாளராக மின்துறையில் நியமனம் செய்யப்பட்டவர் ஆவார். அன்னாருக்கு நிரந்தர மின்பணியாளர் பதவியில் பணிவரன்முறையும், தகுதிகாண்பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை.

**மி.து.ந.க.எண்.அ5/4566/08**

ரேடியோ எலக்டிரிசியன் பதவி உயர்வு சம்மந்தமாக அமைந்த படிவம், பதிவுருத்தாள், பரிந்துரைப்பட்டி ஆகியவை பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ரேடியோ எலக்டிரிசீயன் பதவிக்கு ஊட்டப்பதவியாக மின்கம்பியாளர் நிலை 2 மற்றும் உதவி மின்இணைப்பாளர் ஆகிய பதவிகள் மட்டுமே சென்னை மாநகராட்சி பொறியியல் வரைவு துணை விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. நிரந்தர மின்பணியாளர் என்ற பதவி துணை விதிகளில் குறிப்பிடப்படவில்லை.

எனவே, ரேடியோ எலக்டிரிசீயன் பதவியின் அவசியத்தை கருத்தில் கொண்டு, இப்பதவிக்கான நியமனமுறையில் ஊட்டப்பதவியாக தெரிவிக்கப்பட்டுள்ள வரிசை எண்.2–ஐ நீக்கம் செய்து, சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 4–ஆம் நிலையிலுள்ள தகுதிபெற்ற நிரந்தர மின்பணியாளர்களை கொண்டு நிரப்ப, வரைவு துணை விதிகளில் திருத்தம் செய்யலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**திருத்தம் செய்யப்பட வேண்டிய துணை விதி:–**

| Category | Recruitment | Qualification |
|---|---|---|
| Category-29<br>Radio Electrician | 1. By direct recruitment<br>(or)<br>2. By promotion from Lower Category Class IV Permanent Electrical Labour. | S.S.L.C. or X std failed with ITI Certificate in Radio Mechanic or Engineering.<br>(or)<br>10 years experience in the field of Radio Mechanic or Engineering for considering promotion from lower category. |

எனவே, கீழ்கண்ட கருத்துருக்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) நியமனமுறையில் திருத்தம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரியுள்ள நிலையில் 31.12.2007–ஐ மைய நாளாகக் கொண்டு வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி, நியமனம் செய்ய இயலாத நிலையில், அதனை இன்மை பட்டியலாக அறிவித்து, பதிலாக 31.12.2008–ஐ மையநாளாக கொள்வதற்கும்,

2) சென்னை மாநகராட்சி, மின்துறையில், நிரந்தர மின்பணியாளராக பணியாற்றி வரும் திரு. ஏ.ராஜகோபால் என்பவரை, அன்னாரது விருப்பதின் அடிப்படையிலும், ரேடியோ எலக்டிரிசியன் பதவிக்கு வேறு எவரும் விண்ணப்பிக்காத காரணத்தின் அடிப்படையிலும், அன்னாருக்கு தற்போது மின்துறையில் காலியாக உள்ள ஒரு பணியிடமான ரேடியோ எலக்டிரிசியன் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கவும்,

3) அன்னாருக்கு ரேடியோ எலக்டிரிசியன் பதவியின் ஊதிய விகிதமான ரூ.2750–70–3800–75–4400–ஐ நிர்ணயம் செய்யவும் அனுமதி வேண்டப்படுகிறது.

4) ரேடியோ எலக்டிசீரியன் பதவியை நிரப்ப ஏற்கனவே உள்ள நியமனமுறையில் வரிசை எண்.2–ஐ நீக்கம் செய்து சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் 4–ம் நிலையில் உள்ள தகுதியுள்ள நிரந்தர மின்பணியாளர்களை கொண்டு நிரப்ப வரைவு துணை விதிகளில் திருத்தம் மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.8.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.  மன்றச் செயலாளர்